# தமிழ்க் காப்பியங்கள் 13

**த**மிழ் மொழி இனிய மொழி. இலக்கிய வளம் மிக்க மொழி. பண்டைய காலத்தில் குறைந்த அடிகளையுடைய பல தனிப்பாடல்கள் புலவர்களால் பாடப்பட்டன.அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தின. சுவை மிக்க நிகழ்ச்சிகளை வருணித்தன; ஒருவரது வாழ்வின் அரிய சாதனையை வெளிப்படுத்தும் பகுதிகளைக் கூறின. அப்பாடல்களைத் தொகுத்து தொகை நூல்களாக பிற்காலப் புலவர்கள் அமைத்தனர். அவையே 'எட்டுத் தொகை' நூல்களாயின.



நூற்றுக்கும் மேற்பட்ட அடிகளை உடைய வேறு சில பாடல்களைப் 'பாட்டு' என்று கூறித் தொகுத்தனர். அவை 'பத்துப் பாட்டு' நூல்களாயின. அவை எல்லாம் தமிழிலுள்ள மிகமிகப் பழமையான இலக்கியங்கள்.




இலக்கிய வரலாற்றில் அடுத்ததாக முழு வரலாற்றைச் சொல்லும் தொடர்நிலைச் செய்யுள்கள் உருவாயின. அவை 'காப்பியங்கள்' எனப்பட்டன. தமிழில் முதன் முதலாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த காப்பியங்களாகத் தோன்றின. அதன் பின்னர் தோன்றிய காப்பியங்களையும் இணைத்து அவற்றின் பெருமை நோக்கி 'ஐம்பெருங்காப்பியங்கள்' என்றும், 'ஐஞ்சிறுகாப்பி-யங்கள்' என்றும் புலவர்கள் பிரித்து அழைத்தனர்.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகியன ஐம்பெரும் காப்பியங்களாகும். சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் ஆகியன ஐஞ்சிறு காப்பியங்களாகும். சிந்தாமணியைத் திருத்தக்க தேவர் என்ற சமண முனிவர்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பாடியுள்ளார். காப்பியத் தலைவனான சீவகனின் பிறப்பு, இளமை, காதல், வீரம் பற்றியும் அவன் வீடுபேறு அடைந்தமை பற்றியும் இந்நூல் கூறுகின்றது. இதில் ஆசிரியருடைய கற்பனைத்திறனும் வருணனைத்திறனும், படிப்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

கோவலன், கண்ணகி கதையைக் கூறுவது சிலப்பதிகாரம். இதனை இளங்கோவடிகள் இயற்றினார். இந்நூலை இளங்கோவடிகள் மூன்று பெருங் காண்டங்களாகப் பிரித்துப் பாடியுள்ளார். சோழ நாட்டுப் பெருமையைப் புகார் காண்டத்திலும், பாண்டிய நாட்டுப் பெருமையை மதுரைக் காண்டத்திலும் சேரநாட்டுப் பெருமையை வஞ்சிக்காண்டத்திலும், வகைப்படுத்தி உள்ளார். தம் கற்பனை வளத்தாலும் கவிதை வன்மையாலும், இந்நூலைச் சிந்தையை அள்ளும் செந்தமிழ்க் காப்பியமாக அமைத்துள்ளார்.



சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தைத் தொடர்ந்து எழுந்ததொரு காப்பியம் மணிமேகலை. மாதவியுடன் கோவலன் வாழ்ந்த காலத்தில், அவர்கட்குப் பிறந்தவளே மணிமேகலை. இவள் துறவு பூண்டு புத்த சமயத்தைச் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கையினை விரிவாகக் கூறுவதே இந்நூல். இதனைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடியுள்ளார்.

சமண மதச்சார்புடைய நூல் வளையாபதி ஆகும். பௌத்த மதச்சார்புடைய நூல் குண்டலகேசி . இவ்விரு நூல்களும் தற்போது முழுமையாகக் கிடைக்கவில்லை. மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ள ஒரு சில செய்யுள்களே கிடைத்துள்ளன.

ஐஞ்சிறு காப்பியங்களுள் சூளாமணியைத் தோலாமொழித்தேவர் இயற்றினார். இது கவிதை நயத்தில் சிந்தாமணியைப் போன்றதொரு நூலாகும். நீலகேசி என்ற நூலை எழுதியவர் பெயர் தெரியவில்லை. இஃதொரு சமண மத நூலாகும். உதயணன் வரலாற்றைக் கூறும் நூலே உதயண குமார காவியம் ஆகும். 'உயிர்க் கொலை தீது' என்பதை வலியுறுத்த எழுந்த நூலே யசோதர காவியம். நாககுமார காவியம் என்றொரு நூல் பெயரளவில் குறிக்கப்படுகிறதே தவிர இதனைப் பற்றி வேறொரு குறிப்பும் தெரியவில்லை.

இலக்கியங்களைக் காலக் கண்ணாடி என்பர். தமிழ் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் சிறந்த இலக்கியங்கள் தோன்றி, நம் தாய் மொழியை வளமாக்கின. பிற்காலத்தில் தோன்றியவற்றுள் இராமாயணம், பெரிய புராணம், தேம்பாவணி,

இரட்சணிய யாத்திரிகம், சீறாப்புராணம் என்பன குறிப்பிடத்தக்க காப்பியங்-களாகும். வட மொழியில் வான்மீகி எழுதிய இராமர் கதையைத் தழுவி, தமிழில் கம்பர் எழுதிய நூல் இராமாயணம். இதனைக் 'கம்பராமாயணம்' என வழங்குகின்றனர். இது கற்பனை நயமும், கவிதை நயமும் சிறந்தது. 'கம்ப நாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' எனப்புலவர் இதனைப் பாராட்டி உள்ளார்.

**'கல்வியின் சிறந்த தமிழ் நாடு - புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ் நாடு'**

என பாரதியார் கம்பரைப் போற்றியுள்ளார்.

சிவனடியார்கள் வரலாற்றைக் கூறும் நூல் பெரிய புராணம். இது சேக்கிழாரால் பாடப்பட்டது.. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனச் சேக்கிழார் பாராட்டப்பட்டுள்ளார்.



இத்தாலி நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டுக்கு வந்த சமயத் துறவி கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி. இவரை மக்கள் 'வீரமாமுனிவர்' என அழைத்தனர். இவர் தமிழைக் கற்றுப் பெரும் புலமைப் பெற்றார். தேம்பாவணி எனும் அரியதொரு நூலைப் பாடினார். இது செந்தமிழின் இனிமை சேர்த்த இன்சுவைக் காப்பியமாக விளங்குகிறது.

இயேசுநாதர் வரலாற்றைக் கூறும் கவிநயம் மிகுந்த காப்பியம் இரட்சணிய யாத்திரிகம். இதனைக் கிருஸ்ண பிள்ளை இயற்றினார்.

அரபு நாட்டு நெறிமுறைகளைத் தமிழ்ப் பண்பாட்டோடு இணைத்து உருவாக்கப்பட்ட காப்பியம் சீறாப்புராணம். இது முகமது நபியின் வரலாற்றைக் கூறுவது. இதனை உமறுப் புலவர் இயற்றினார் .

'காப்பியம் என்பது எப்படி அமைய வேண்டும்' என்பதற்குச் சிறந்த சான்றுகளாக விளங்குவன நம் தமிழ்க் காப்பியங்கள். அவை தமிழ் மொழிக்கு வளம் சேர்ப்பன; செய்திகளைச் சொல் நயம், பொருள் நயம், அணி நயம், கற்பனை நயம் தோன்ற எடுத்துக் கூறுவன. படிப்பவர் மனதில் நன்னெறிகளைப் பதியவைப்பன. அவற்றைப் படித்து நாம் பயன் பெறுவோமாக.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அரியசாதனை | - | அபூர்வமான சாதனை |
| காப்பியம் | - | தெய்வத்தையோ, உயர்ந்த மக்களையோ கதைத் தலைவர்களாகக் கொண்ட நீண்ட செய்யுள் இலக்கியம் |
| சமணம் | - | அகிம்சையை வாழ்க்கை நெறியாக கடைப்பிடிக்கக் கூறும் ஒரு மதம் |
| செந்தமிழ் | - | செம்மையான உயர் வழக்குத் தமிழ் |
| துறவு | - | சன்னியாசம் |
| வளம் | - | செழுமை நிரம்பி இருப்பது |
| நனி | - | மிக்க |

## கிரகித்தற் பயிற்சி

1. *தனிப்பாடலின் சிறப்புக்கள் எவையெனக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது?*
2. *பத்துப் பாட்டு என்பது யாது என குறிப்பிடப்படுகிறது?*
3. *தொடர் நிலைச் செய்யுட்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?*
4. *காப்பியம் என்றால் என்ன?*
5. *ஐம்பெருங்காப்பியங்கள் எவை?*
6. *சீவகசிந்தாமணி யாருடைய கதையைக் கூறுகிறது?*
7. *முழுமையாகக் கிடைக்காத காப்பிய நூல்கள் எவை?*
8. *சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அமைந்த காப்பியம் எது? அது கூறும் கதையினைச் சுருக்கமாக எழுதுக.*
9. *காப்பியங்கள் மனித வாழ்விற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை விபரித்து எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| செயற்பாடு 1 | : | போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகச் சுற்றாடலில் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து முறைப்பாடு ஒன்றினைத் தகவல் திரட்டி, விபரங்களை விபரித்து, முறையிடுக. |
| செயற்பாடு 2 | : | தினசரிப் பத்திரிகை ஒன்றைப் பெற்றுக் குறித்த நேரத்தில் மேலோட்டமாக வாசித்து சாரம்சத்தை உமது நண்பனுக்குக் கூறுக. |
| செயற்பாடு 3 | : | குழுவாகச் செயற்பட்டு சிலப்பதிகார கதையினைக் அறிந்து சுவைபடத் தொகுத்துக் கூறுக. |
| செயற்பாடு 4 | : | குழுவாகச் செயற்பட்டு இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள இலக்கியங்களையும் அதன் ஆசிரியர்களையும் பட்டியற் படுத்துக. |
| செயற்பாடு 5 | : | சூழலைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயாரித்து விநியோகிக்க. |

# மொழிவளம்

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

ஒரு தொடரில் சொல்ல வேண்டிய விடயத்தை ஒரு சொல்லில் பொருள் விளங்குமாறு கூறுவதையே தொடர் மொழிக்கு ஒரு மொழி என்போம்.

'நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட தனிப்பிரதேசம்' என்ற தொடரை ஒரே சொல்லில் தீவு என்று குறிப்பிடலாம்.

| | தொடர் மொழி | ஒரு மொழி |
|---|---|---|
| 1. | நிகழ்ச்சியொன்றைப் பலர் அறிய முதன் முதலாக மேடையேற்றுவது. | அரங்கேற்றம் |
| 2. | நூலொன்றுக்கு நூலாசிரியர் அல்லாத வேறொருவரால் எழுதப்படும் உரை. | அணிந்துரை |
| 3. | ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன். | அட்டாவதானி |
| 4. | வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறைமுகமாக இகழ்ந்தும் பாடுவது. | அங்கதம் |
| 5. | நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு முன்னர் சரி பிழை பார்த்துத் திருத்துவது. | ஒத்திகை |
| 6. | நிலத்தின் உடைமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றாக எழுத்து வடிவில் அமைந்த ஆவணம். | உறுதி |
| 7. | மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உறுப்புக்கள். | ஐம்பொறி |
| 8. | நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பொருள். | ஐம்பூதம் |
| 9. | இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா. | வெள்ளிவிழா |
| 10. | ஐம்பதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா. | பொன்விழா |
| 11. | அறுபதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா. | வைரவிழா |
| 12. | எழுபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா. | பவள விழா |
| 13. | நூறாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா. | நூற்றாண்டுவிழா. |
| 14 | ஒன்றைப் பிரதி செய்து எழுதுவது. | படியெடுத்தல் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# இலக்கணம்

## ▶ செயப்படுபொருள் வேற்றுமை

**பின்வரும் வாக்கியங்களைப் பொருள் விளங்க வாசிப்போம்.**

- ★ நான் அம்மாவைக் கூப்பிட்டேன்.
- ★ மாணவர்கள் மரத்தை நட்டனர்.
- ★ குழந்தை நிலவை இரசித்தது.
- ★ பூனை எலியைத் துரத்தியது.
- ★ நிமால் சாந்தனைத் தேடினான்.

இந்த வாக்கியங்களில் இடம்பெறும் அம்மா, மரம், நிலவு, எலி, சாந்தன் ஆகிய பெயர்ச் சொற்கள் ஐ உருபை ஏற்று வந்துள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | + | ஐ | = | அம்மாவை |
| மரம் | + | ஐ | = | மரத்தை |
| நிலவு | + | ஐ | = | நிலவை |
| எலி | + | ஐ | = | எலியை |
| சாந்தன் | + | ஐ | = | சாந்தனை |

ஐ செயப்படுபொருள் வேற்றுமையின் உருபு ஆகும்.
ஐ உருபின் பொருள் செயப்படு பொருளாகும்.

ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் செயப்படு பொருளை எவ்வாறு அறிந்து கொள்வது என்பதை விளங்கிக் கொள்வோம்.

வாக்கியத்தின் பயனிலையுடன் தொடர்புபடுத்தி **யாரை, எதை** என்று வினவும்போது வரும் விடை செயப்படுபொருளாக அமையும்.

உதாரணமாக

| | |
|---|---|
| அஸ்ரப் சாந்தனை அழைத்தான். | - யாரை? |
| பூனை எலியை துரத்தியது. | - எதை? |
| கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாத்தது. | - எதை? |

இத் தொடர்களில் இடம் பெறும் சாந்தன், எலி, குஞ்சுகள் ஆகிய சொற்களைச் செயப்படுபொருளாகக் கொள்வோம். இப் பெயர்ச் சொற்கள் ஐ என்ற வேற்றுமை உருபை ஏற்று வருகிறன.

## பயிற்சி

**1. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் செயப்படு பொருளை இனங் கண்டு எழுதுக.**

1. நாம் பாடப்புத்தகங்களைக் கவனமாக வைத்திருப்போம்.
2. மாணவர்கள் அகராதியைப் பயன்படுத்தப் பழகிக்கொண்டனர்.
3. தமிழைக் கற்போம்.
4. மாணவர்கள் தமிழறிஞரைக் கௌரவித்தனர்.
5. இரண்டு நாட்கள் மலையகத்தைச் சுற்றி வலம் வந்தோம்.
6. ஆசிரியர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விமர்சித்தார்.
7. பாரதியார், கவிதையை ஆயுதமாகப் பயன்படுத்தினார்.

**2 சுருக்கமான விடை தருக.**

1. செயப்படு பொருள் வேற்றுமையின் உருபு யாது?
2. அது என்ன பொருளில் வருகிறது?
3. ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் செயப்படு பொருளை எவ்வாறு இலகுவாக இனம் காண்பீகள்?

**3. செயப்படு பொருளைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைப்போம்.**

1. .................................... மரத்தை ........................................
2. .................................... இசையை ......................................
3. .................................... விபத்தை ......................................
4. .................................... அப்பாவை ..................................
5 .................................... கல்லை ........................................
6..................................... காட்டை ........................................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக